2013 மே 2]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வீடற்ற, வீட்டுமனை இல்லாத ஏழை, எளிய மக்களுக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால், எத்தனையோ அரசுகள் தமிழ்நாட்டை ஆண்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும்தான், அதிகமான எண்ணிக்கையில் வீட்டுமனைப் பட்டாக்களை ஏழை, எளிய மக்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்ற புள்ளிவிவரங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையினைப் பெற்று, மேலும் 2 இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 379, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

379—

ஆரம்ப சுகாதார நிலையம்

3654—திருமதி மனோரஞ்சிதம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, சாமல்பட்டியில் தற்போதுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன்கூடிய சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, மாத்தூர் ஊராட்சி ஒன்றியம், சாமல்பட்டியில் செயல்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசாணை எண் 338, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 11-12-2012-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, தற்போது கட்டடப் பணிகள் துவங்கப்பட உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம், நித்தம் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

ஊத்தங்கரை தொகுதிக்கு சார்பு நீதிமன்றம் வழங்க ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை தொகுதி, சாமல்பட்டியில் தற்போதுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை உடனடியாகத் தரம் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அங்கு ஒரு நிழற்கூடம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2013 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊத்தங்கரை தொகுதி, சாமல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளின் வசதிக்காக நிழற்கூடம் வேண்டுமென்று கூறியுள்ளார்கள். தேசிய ஊரக நலவாழ்வுச் சங்கத்திலிருந்து நிதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பணியைச் செய்து தருவதற்கு ஆவன செய்யப்படும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப் படி உயர்வு—முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடு) திரு. கலைஅரசு நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் record ஆகாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். விதி 110-ன்கீழ் அறிக்கைகளைப் படிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எழுந்துவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கையைப் படிக்க இருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படிக்க எழுந்துவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.